மனனம் செய்ய
இந்த வார வசனம்:

அப்பொழுது, அறிவெல்லாம் கடந்த இறை அமைதி, கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள உங்கள் உள்ளத்தையும் மனத்தையும் பாதுகாக்கும்.

(பிலிப்பியர் 4:7)

திருவருகைக் காலத்தின் இறுதி ஞாயிறில் ஒன்றுகூடி அமைதியின் அரசருக்காகக் காத்திருக்கும் நமக்கும் இதுதான் பொருத்தமாக இருக்கிறது. நான்காவது ஊதா நிற மெழுகுத்திரி அமைதியின் மெழுகுவர்த்தி, வானதூதரின் செய்தியை நினைவூட்டும் வகையில் வானதூதரின் மெழுகுத்திரி என்றும் அழைக்கப்படுகிறது. உலகில் அமைதியும் மனிதருக்கு சமாதானமும் உண்டாகுக. இயேசுவின் பிறப்பு கடவுளோடும், உலகினரோடும் அமைதியைக் கொண்டுவருகிறது. கொந்தளிப்பு, அமைதியின்மை ஆகியவற்றின் மத்தியில் உண்மையான அமைதியைக் கொண்டுவரும் ஊற்றாயிருப்பவர் இயேசுவே.

இன்றைய முதல் வாசகத்தில், “இதோ! கருவுற்றிருக்கும் அந்த இளம்பெண் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார்; அக்குழந்தைக்கு அவள் “இம்மானுவேல்” என்று பெயரிடுவார். என்று எசாயா இறைவாக்குரைக்கின்றார். இம்மானுவேல் என்றால் கடவுள் நம்மோடு என்பது பொருள்.

மத்தேயுவின் நற்செய்தியில் எசாயா இறைவாக்கினர் முன்னறிவிப்பு நிறைவேறுவதை நாம் காண்கிறோம். இறைவாக்கினர் வாயிலாக கடவுள் உரைத்தது அனைத்தும் ஆண்டவரால் நிறைவேறின. கடவுள் தம் வாக்குறுதியை நிறைவேற்றினார். வாக்கு மனிதராகி கன்னியிடம் பிறந்தார். கடவுளிடமிருந்து மிகப்பெரிய அடையாளத்தை நாம் கண்டோம். மக்களை பாவங்களிலிருந்து மீட்க வந்த மிகப்பெரிய ஆசீரும் அடையாளமும் இயேசுவே

மறைநூல்களின் வழியாக இறைவாக்கினர்கள் முன்னறிவித்த இயேசுவை திருத்தூதராக அழைக்கப்பட்ட பவுல் மக்களுக்கு எடுத்துரைக்கின்றார். உரோமையில் உள்ள கிறிஸ்துவர்களுக்கு கிறிஸ்துவின் வழியாக கடவுளின் அமைதியையும் ஆசீரையும் சமாதானத்தையும் வெளிப்படுத்துவதை பவுல் தம்முடைய கடிதத்தில் கூறுகிறார்.

இன்று இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளிலே அடைக்கலத்தை நாடிச்செல்வோம். அமைதியை அளிக்கிறேன். என் அமைதியை உங்களுக்கு விட்டு செல்கிறேன். வாழ்வு தரும், உறுதி தரும் கட்டளை.

**இன்றைய வாசகங்கள்:**

எசாயா 7: 10-14;
திருப்பாடல் 24: 1-6;
உரோமையர் 1: 1-7;
மத்தேயு 1: 18-24.

INTERNAL CIRCULATION ONLY
BUL 51/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

18 டிசம்பர் 2022

# Newbec

NEW WAY OF BEING CHURCH

திருவருகைக் காலத்தின் நான்காம் ஞாயிறு

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது

மாதாந்திர கருப்பொருள்:
**கிறிஸ்மஸ் காலம் (25 டிசம்பர் – 1 ஜனவரி 2023)**



# என் அமைதியை உங்களுக்கு அளிக்கிறேன்

அமைதியை சிறப்பான முறையில் சித்தரிக்கும் ஒரு ஓவியத்தை வரைபவருக்கு அரசர் வெகுமதி தருவதாக அறிவித்தார். பல தலைசிறந்த படைப்புகள் கண்காட்சியில் அரசரின் பார்வைக்கு வைக்கப்பட்டன. நீல வானத்துடன் பனிமூடிய மலை, அருகில் அமைதியான ஏரியின் ஓவியம் வெற்றி பெறும் என்று பலர் நினைத்தார்கள். ஆனால் கடல் கொந்தளிப்பின்போது, தன்னுடைய கூட்டில் ஒரு பறவை அமைதியாக அமர்ந்திருந்த ஓவியத்தை அரசர் தேர்ந்தெடுத்தார். கொந்தளிப்பின் காலத்திலும் உள்ளத்தில் அமைதி இருந்தால் மட்டுமே உண்மையான அமைதியை அனுபவிக்கமுடியும் என்று அரசர் வித்தியாசமாக சிந்தித்தார்.